[15th March 1963

Power supply for Agriculture

* 252 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Electricity Department insists on the agriculturists installing pump sets before they lay the line to the wells even though they know that loans have been sanctioned to the agriculturists by the L.M. Banks and in the Block Development Offices; and

(*b*) if so, whether the Government will give instructions to the department to lay the lines in such cases and avoid delay in giving service to the wells?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) No instructions of the kind are necessary as it will result in financial loss to the State Electricity Board in cases where the lines are erected, but services are not taken. There is no delay at present in giving the supply.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, what is the standing order given to the Department in the matter of giving connections to the pump-sets used by the agriculturists in view of the national emergency?

The Hon. Sri R. VENKATARAMAN : No connections are given during day-time. They will have power supply during the night.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார் இம்மாதிரி நடை முறையில் இருப்பதால் ஹரூர் தாலூகாவில் தம்மநத்தம் என்ற கிராமத்தில் பல விவசாயிகள் தங்களிடமுள்ள இறைப்பு மாடுகள் ஆயில் எஞ்சின்கள் பம்பு செட்டுகள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு எலெக்ட்ரிக் மோட்டார் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கனெக்ஷன் கொடுக்க வில்லை. அதனால் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதனால் பல விதத்தில் கஷ்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு மின்சார போர்டு பொறுப்பாளியா அல்லது யார் பொறுப்பாளி என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி போடுவதற்கு. இதற்கு கனம் அங்கத்தினர் இவ்வளவு நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை. இதைப்பற்றி எனக்கு எழுதி அனுப்பியிருந்திருந்தால் இரவு நேரங்களில் மின்சாரத்தை சப்ளை செய்வதற்காவது உடனடியாக ஏற்பாடு செய்திருக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. பம்பு செட்டுகள் வைத்திருந்தாலும் கனெக்ஷன் கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. பம்பு செட்டுகளை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு உடனடியாகக் கனெக்ஷன் கொடுக்க இந்த அரசாங்கம் உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு பகுதியில் ஒரு அங்கத்தினர் மாத்திரம் பம்பு செட்டு வைத்து விட்டு மற்றப் பகுதியிலுள்ளவர்கள் பம்பு செட்டுகள் வைத்துக்கொள்ளாமல் இருந்து பம்பு செட்டு வைத்துக்கொண்டிருக்கிறவருக்கு மாத்திரம் கனெக்ஷன் கொடுப்பது என்பது முடியாத காரியம். அது கஷ்டமாக இருக்கும். அந்தப் பகுதியிலுள்ளவர்கள் எல்லோரும் கேட்டால் தான் கொடுக்க முடியும். அதனால் தான் இப்படிப்பட்ட